கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்

*வினா எண். 42—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் மின்சாரக் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து சோதித்ததின் பலன் யாது?

(ஆ) இச் சங்கங்கள் எந்தெந்த பகுதிகளில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கிராமப்புறங்களில் மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து செயல்பட்ட முதலாண்டில் 133 விவசாய இணைப்புகளுக்கும் 65 ஊரகத் தொழில்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் கிராம மின்சாரக் கூட்டுறவு சங்கம் ஆரம்பித்தபோது இதனுடைய வருவாய் ரூபாய் 3.7 இலட்சமாகும். இச்சங்கத்தின் வருவாய் முதலாண்டில் 4.5 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயத்தில் மற்றொரு சங்கம் 5-3-82-ல் அரசு பதிவு பெற்றுள்ளது. மேலும் இதுபோன்ற சங்கங்கள் ஆரம்பிக்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய குறிப்புகள் மின்சார வாரியத்தால் சேகரிக்கப்பட்டு வருகிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிட்சார்த்தமாக பார்த்தபோது இது லாபகரமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை ஏதோ ஒரு சில பகுதிக்கு என்பதைக் காட்டிலும், கிராமப்புற மின்சாரத் திட்டங்களுக்கும் இதை பயன்படுத்துவதற்கு அரசு ஏதாகிலும் பரிசீலிக்கிறதா? அதேபோல் நகர்ப்புறத்திலும் இதைச் செய்வதற்கு வாரியம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முதலில் சோதனை அடிப்படையில் இவைகளை ஆரம்பித்து நடவடிக்கை எடுத்துப் பார்த்து, இவைகள் வெற்றிகரமாக இயங்குகிறது என்று ஆராய்ந்த பின்னர், இத்தகைய கூட்டுறவு அமைப்புகளை நாம் மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்த இருக்கிறோம். இப்போதுதான் கும்பகோணத்தில் ஆரம்பித்து நடைமுறையில் இயங்கி வருகிறது. திருமயத்தில் இன்னும் ஆரம்பிக்க இருக்கிறோம். அடுத்து வந்தவாசியிலும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவைகள் எல்லாம் எப்படி இயங்குகின்றன என்பதைப் பார்த்துத்தான் செய்ய முடியும்.

1982 செப்டம்பர் 10]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வாரியம் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின்சாரத்தை எந்த விலைக்கு விற்கிறது. அவர்கள் அதை வினியோகிக்கும்போது அவர்கள் வசூலிப்பதில் எந்தக் கட்டணத்தில் வசூலிக்கிறார்கள் என்ற விவரம் அரசு தரப்பில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவு மின்சார நிறுவனங்கள், நாம் என்ன கட்டணங்களை மின் வாரியத்தின் மூலமாக அமுல்படுத்துகிறோமோ, அதன் அடிப்படையில்தான் அவர்கள் வசூலிக்கிறார்கள். ஆனால் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் கொடுக்கின்ற மின்சாரத்திற்குப் பெறுகின்றகட்டணம் யூனிட்டுக்கு 15 பைசாவாகும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கிராமப்புற மின்சாரக் கூட்டுறவு சங்கங்களில் அமைக்கக் கூடிய இந்த மின்சாரத்தை பம்புசெட்டுகளுக்கும், இதர கிராமப்புற சிறு தொழில்களுக்கும் பயன்படுத்துவதற்கு அரசு மின்சார சப்ளை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இது அமைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-10]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது மின்சாரத்தை வினியோகிக்கும் பணியை மட்டும் செய்து வருகிறது. இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சிறிய அளவிலே அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்கிற அந்த முயற்சியை மேற்கொள்ள அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முன்வருவார்களானால் அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சிறிய தொழில்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 50 பைசா வீதம் வசூல் செய்வது அதிகம் என்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு விதிக்கின்ற கட்டணங்களை மின்சார வாரியம் வசூலிக்கிறது; அதைத்தவிர அரசு வேறு ஒன்றும் அறியாது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். அவைகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகப் பதிவு செய்யப்படுகின்றனவா அல்லது அரசாங்கமே நேரடியாகப் பதிவு செய்கின்றதா? அதற்காக யார் யார் பொறுப்பாக இருக்கிறார்கள்? அப்பிசியல்ஸ் அதிலே யாராவது கலந்து கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் பதிவு செய்கிறார்கள். மின்வாரியப் பொறியாளர் ஒருவரை அதற்கு நிர்வாக இயக்குனராகப் போட்டு இருக்கிறோம். அதற்கென ஒரு குழு (போர்டு) அமைக்கப்பட்டுள்ளது. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள், போன்ற அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அதிகாரப்பற்றற்றவர்கள் யாரும் இல்லை.

தமிழ்நாட்டிலுள்ள பால் வழங்கும் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*வினா எண். 43—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் எத்தனை?

(ஆ) பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தமிழ்நாட்டில் எத்தனை?

(இ) இரண்டையும் ஒன்றாக்கும் உத்தேசம் உண்டா?

(ஈ) இரண்டின் மொத்த பால் உற்பத்தி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) 30–6-82 வரை தமிழ்நாட்டில் உள்ள பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1,935.

(ஆ) 30-6–82-ல் தமிழ்நாட்டில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 4,952.

(இ) இல்லை. பால் வழங்கும் சங்கங்கள் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

(ஈ) இரண்டின் தினசரி சராசரி பால் உற்பத்தி 1982 ஜூன் மாதத்தில் நாளொன்றுக்கு 7,31,067 லிட்டர் ஆகும்.